

திருச்சியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று (1.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, திருச்சி காந்திநகர் மார்க்கெட் பகுதியில் அங்குள்ள வாக்காளர்களை சந்தித்து, வாக்குச் சேகரித்தார். உடன், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.



திருச்சியில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு நேற்று (1.4.2026) வருகைபுரிந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, சாலையோர தேநீர் கடையில் தேநீர் அருந்தினார். உடன், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.4.2026) கரூரில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கே.சி. பழனிசாமி அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று உடல்நலம் விசாரித்தார். இந்நிகழ்வின்போது, கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில்பாலாஜி, கே.சி. பழனிசாமி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தி.மு.க. தேர்தல் வாக்குறுதியைத் தந்தால் அதை
# நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது!
### தூத்துக்குடியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!




தூத்துக்குடி, ஏப்.2-

நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி கலைஞர் அரங்கத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி., “மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து, திமுக சார்பில் நாளை எனது பிரச்சாரத்தை கீழடியில் தொடங்க உள்ளேன்” என்று தெரிவித்தார்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரை, கீதா ஜீவன் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் என்று என்னால் சொல்ல முடியும். காரணம், தொடர்ந்து மக்கள் பணியை செய்து வரும் ஒருவர்; தொகுதி மக்களுடன் பரிச்சயம் உடையவர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளிலும், அமைச்சராக அவர் செய்துள்ள பல பணிகளிலும், நமது முதல்வருக்கு பெருமை சேர்த்த வகையில் பணிகளை செய்து இருக்கிறார்.

திமுக ஆட்சி மக்களுக்கான ஆட்சியாகவும், முக்கியமான பெண்களுக்கான, பெண்களை உயர்த்தக்கூடிய ஆட்சியாக அமைந்துள்ளது. இளைஞர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடக்கூடிய பல்வேறு தொழில் முதலீடுகளைக் கொண்டு வந்து வேலை வாய்ப்பை உருவாக்கிய ஆட்சியாக அமைந்துள்ளது.

மற்ற தேர்தல் அறிக்கையை மக்கள் திரும்பி கூட பார்க்காத சூழலில், திமுக தேர்தல் அறிக்கை கொண்டாட கூடிய சூழ்நிலை இருக்கிறது என்றால் அதற்கு காரணம் திமுக எந்த வாக்குறுதியை தந்தாலும் அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

நம்முடைய முதல்வர் தேர்தல் நேரத்தில் தந்து இருக்கக்கூடிய வாக்குறுதிகளை மக்கள் அவலோடும், திமுக மறுபடியும் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றி தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரைவில் முதல்வர் ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமையப் போகிறது; மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

புதிய வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதில் எதிர்ப்புகள் இருப்பது குறித்து கேள்விக்கு, வேட்பாளர்களை மாற்றி அறிவிக்கும் போது சில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கும். கூட்டணி பேச்சுவார்த்தைகளின்போதும் சில சர்ச்சைகள் உருவாகும். எல்லோருக்கும் தெரியும் நாம் கருத்தியலால் ஒன்றுபட்டவர்கள். அதனால், ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம் வெற்றியை நோக்கி பணியாற்றுவோம். அதேபோன்று எந்தப் பகுதியில் நாம் புதிய வேட்பாளரை அறிவிக்கும் போது அங்கு இருப்பவர்களுக்கு சிறிய வருத்தம் இருந்தாலும் அனைவரும் திராவிட கழக தோழர்களாக இணைந்து பணியாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டு விட்டதாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, அதற்கு பதில் சொல்ல வேண்டியது அவரே. அவரது குற்றச்சாட்டின்படி சதவிகித அடிப்படையில் பார்க்கும் போது, தேசிய அளவில் தமிழ்நாட்டில் தான் குற்றங்கள் குறைவாக உள்ளது. குற்றங்கள் நடந்தால் கூட அதில் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சி திமுக ஆட்சி. விரைந்து நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்கக்கூடிய ஆட்சி திமுக ஆட்சி.

பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களை விட, நிச்சயமாக தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைவாக உள்ளது. அவர்கள் கூட்டணியில் உள்ளவர்கள் தவறு செய்தவர்களை எவ்வாறு காப்பாற்றினர் என்பதும் அனைவருக்கும் தெரியும். இன்று குற்றம் செய்யக் கூடியவர்களுக்கு எப்படி மிக விரைந்து தண்டனை கொடுக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம் என்று பதிலளித்தார்.

தொடர்ந்து, முன்னாள் திமுக தலைவரும், முதலமைச்சருமான மறைந்த கலைஞர் கருணாநிதி திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதா ஜீவனை ஆதரித்து பிரச்சாரத்தை தொடங்கி, கனிமொழி கருணாநிதி எம்.பி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

## சைதை தொகுதி
# 168 ‘அ’ வட்டத்தில் வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிப்பு!
### வட்டச் செயலாளர் – தா.மோகன்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.2-

168 (அ) வட்டத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குக்கள் சேகரிக்க உள்ளார். வட்டக் கழகத்தினர் இந்நிகழ்வில் பங்கேற்குமாறு வட்டச் செயலாளர் - தா. மோகன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

168 (அ) வட்ட கழக செயலாளர் தா. மோகன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி 168 அ வட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழகத்தின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் வெற்றி வேட்பாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (02.04.2026 வியாழக்கிழமை) காலை 7 மணியிலிருந்து நண்பகல் 2 மணி வரை ஆலந்தூர் சாலை ஐந்து விளக்கு, நெருப்புமேடு பகுதியில் மற்றும் ஜோகி தோட்டம், ஜோதியம்மாள் நகர், செட்டித்தோட்டம், வி.ஜி.பி. சாலை, கஸ்டமர்ஸ் காலனி, சென்டரல் எக்சைஸ் காலனி, பார்சன் அடுக்குமாடி குடியிருப்பு, விநாயகபுரம்,

மாலை 4 மணியிலிருந்து 5 மணி வரை அருளாயம்மன்பேட்டை, நாகிரெட்டி தோட்டம், லேபர்காலணி, லேபர்காலணி மேல்குடியிருப்பு, அன்னை சத்யா நகர், வண்டிப்பாதை தெரு, ஆகிய ஏரியாகளில் வீதி, வீதியாக சென்று வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குக்கள் சேகரிக்க உள்ளார்.

எனவே இந்நிகழ்விற்கு 168(அ) வட்டத்தை சார்ந்த அனைத்து பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக, நிர்வாகிகள் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள் காலை 6 மணிக்குள் ஐந்து விளக்கு அருகில் வருகை புரிமாறு வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஐட்ரீம் இரா.மூர்த்தி தலைமை! இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை!
# இராயபுரம் வேட்பாளர் அ.சுபேர்கானை ஆதரித்து செயல் வீரர்கள் கூட்டம்!
### ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி சிறப்புரை!

சென்னை, ஏப்.02

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இராயபுரம் வேட்பாளர் அ.சுபேர்கான் அவர்களை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் தொகுதி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (02.04.2026 வியாழக்கிழமை) மாலை 5.00 மணியளவில் ரம்ஜான் மஹால், இராயபுரத்தில் நடைபெறுகிறது.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார். இராயபுரம் பகுதிச் செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபாலன், எம்.கே.இஸ்மாயில், கு.சுந்தர், சு.திருஞானம், பி.ஜெயலட்சுமி, வி. மலையம்மாள், லோ.மோகன், இ. மதன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தா.இளையஅருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந. மனோகரன், மதாரம்மா கனி பாரூக், சிவ.பேரறிவாளன், எம்.செந்தில்குமார், சு.ஜீவன், எல். சுந்தர்ராஜன், கு.வேம்புலி வெங்கடேசன், கமுதி சம்சுதின், இராயபுரம் அலி, கே. அல்லாபகஷ், டி. மாறன், கோல்டு ரஃபி, லார்டு பாஸ்கர், முகமது பாரூக், மு.கோபி, க. நாகம்மை, வே.சிவக்குமார், சு.சேகர், கி.ராஜேந்திரன், நா. சண்முகம், வி.விஜயலட்சுமி விஜயகுமார், ஆர். சுரேஷ்குமார், கீதாசுரேஷ் எம்.சி, பா.வேளாங்கண்ணி எம்.சி, லயோலா கே.மதன், கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, கார்த்திக் செங்குட்டுவன், பி. செந்தில்குமார், லியோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், ஆர்.வி.லட்சுமிவேலு, இரா.பாலன், எம்.எல்.ரவி, க.கலைச்செல்வன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என். கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், வி.கண்ணன், எஸ். புகழேந்தி, கொரியர் பி. முருகன், எல்.பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், எஸ்.சரேஷ், எம்.என். வெங்கட், எல்.சீனிவாசன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், ஐசிஎப்.பழனி, என்.பாரி, கே.லட்சுமணன், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், இரா.ஜெய்சங்கர், பிரியாணி பாலா, முகமது மொய்தீன், ந.குமார், ஏ.அன்வர், பி. பாலாஜி, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர், கு.ரமேஷ், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தல் – 2026 முன்னிட்டு, ஆவடி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆவடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிமனை மாவட்ட கழகச் செயலாளரும் ஆவடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அமைச்சர்ஆவடி சாமு நாசர் திறந்து வைத்தார். உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வின் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் திருத்தணி சட்டமன்ற தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்து திருத்தணி நகரம் பைபாஸ் சாலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி.எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. தலைமையில் தேர்தல் பணிமனையை தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் திறந்து வைத்தார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், ஒன்றிய நகர செயலாளர்கள் திருத்தணி வி. வினோத்குமார், பா. ஆர்த்தி ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கிரன், மற்றும் கழக நிர்வாகிகள் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.